பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

24 11 2024 **SUNDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

3. மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்டில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

4. தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இன்று நடைபெற்று வருகிறது.

5. ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது. **Yashasvi Jaiswal** சதம் அடித்தார்.

**>>>><<<<**

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் முக்கியப் பங்கு வகிப்பதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்துபேசும் மன்-கி-பாத் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (1) 54 செகண்ட்ஸ்)

தேசிய மாணவர் படை தினம் இன்று கொண்டாடப்படுவதை சுட்டிக்காட்டிய பிரதமர், இப்படையை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

சென்னையில் செயல்பட்டு வரும் **Prakrith** அறிவகம் பற்றி குறிப்பிட்ட பிரதமர், குழந்தைகளின் படிப்பாற்றல் திறனை மேம்படுத்துவதற்காக இந்த நிறுவனம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் எடுத்துரைத்தார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (2) 65 செகண்ட்ஸ்)

இதேபோல், சென்னையைச் சேர்ந்த கூடுகள் அறக்கட்டளை, சிட்டுக்குருவிகளின் எண்ணிக்கையை பெருக்குவதற்கான பணிகளில் பள்ளிக் குழந்தைகளையும் பங்கேற்க வைத்துள்ளதாக பிரதமர் கூறினார்.

(சவுண்ட் பைட் - பிரதமர் (3) 78 செகண்ட்ஸ்)

அன்னையின் பெயரில் மரம் நடும் இயக்கம், மிகப்பெரிய அளவில் வெற்றி பெற்றுள்ளதாகவும், இதுவரை இந்த இயக்கத்தின் கீழ் 100 கோடிக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

இந்த இயக்கத்தில் நாட்டு மக்கள் அனைவரும் தொடர்ந்து பங்கேற்க வேண்டும் என்றும் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டார்.

தூய்மையே சேவை இயக்கம், அரசு துறைகளில் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் கூறினார்.

பணியிடங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அரசு அலுவலர்கள் தற்போது உணர்ந்திருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

பிரதமர் ஆற்றிய இந்த உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்று இரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

இதற்கிடையே, கூடுகள் அறக்கட்டளை பற்றி பிரதமர் குறிப்பிட்டுப் பேசியது, தங்களது செயல்பாடுகளுக்கு கிடைத்த அங்கீகாரம் என்று அதன் இணை நிறுவனர் திருமதி. சாந்தினி எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - சாந்தினி 35 செகண்ட்ஸ்)

இதேபோல், **Prakrith** அறிவகம் பற்றி பிரதமர் பேசியிருப்பது தமக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக அதன் நிறுவனர் திரு. ஸ்ரீராம் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட - ஸ்ரீராம் 53 செகண்ட்ஸ்)

>>>><<<<

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் சுமுகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இன்று புதுதில்லியில் மத்திய அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இக்கோரிக்கை வலியுறுத்தப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த கூட்டத்தொடர் நாளை தொடங்கி அடுத்த மாதம் 20ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

>>>><<<<

மஹாராஷ்ட்ரா மற்றும் ஜார்க்கண்டில் புதிய அரசு அமைப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளன.

மஹாராஷ்ட்ரா சட்டப்பேரவை தேர்தலில் அமோக வெற்றி பெற்ற பிஜேபி கூட்டணிக் கட்சித் தலைவர்கள் இதுதொடர்பாக விரைவில் விவாதிக்கவுள்ளதாக அம்மாநில முதலமைச்சரும், சிவசேனா கட்சியின் தலைவருமான திரு. ஏக்நாத் ஷிண்டே கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தலில் வெற்றிபெற்றுள்ள ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா – காங்கிரஸ் கூட்டணி சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டம் இன்று ராஞ்சியில் நடைபெறுகிறது.

>>>><<<<

தமிழகத்தில் வாக்காளர் பட்டியலில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சிறப்பு முகாம்கள் மாநிலம் முழுவதும் இரண்டாவது நாளாக இன்றும் நடைபெற்று வருகிறது.

வாக்குச்சாவடிகளில் நடைபெற்று வரும் இந்த முகாம்களில் பெயர் சேர்த்தல், நீக்குதல் மற்றும் முகவரி மாற்றம் போன்றவற்றை மேற்கொள்வதற்கான விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

>>>><<<<

தமிழகத்திற்கு போதிய அளவு நிதியுதவியை மத்திய அரசு வழங்கி வருவதாக பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இருப்பினும் மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று திமுக அரசு திட்டமிட்டு குற்றச்சாட்டுகளை சுமத்தி வருவதாக குறை கூறினார்.

திமுக அரசு பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதாகவும் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கூறினார்.

>>>><<<<

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா வலுவான நிலையில் உள்ளது.

**Perth-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாவது நாளான இன்று, விக்கெட் இழப்பின்றி 172 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிவரும் இந்தியா, சற்றுமுன்வரை 5 விக்கெட் இழப்புக்கு 359 ரன் எடுத்துள்ளது.

**Yashasvi Jaiswal** அபாரமாக ஆடி சதம் அடித்து, 161 ரன்னுக்கு ஆட்டமிழந்தார்.

>>>><<<<